1990 ஆகஸ்ட் 20]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டுக் காலமாக, தமிழகம் தவிர வெளி மாநிலங்களில் 25 இடங்களில் கண்காட்சிகள் நடத்தப்பட்டன. அந்தக் கண்காட்சிகளின் மூலமாக அரசுக்கு ஏறக்குறைய 10 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நஷ்டத்திற்கான காரணங்களை ஆய்வு செய்தபோது, அதற்கான விளம்பரம் செய்த வகைகளிலேயும் போக்குவரத்து மற்றும் இதர செலவுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட தொகைக்கு அதிகமாக செலவுகள் மேற்கொண்டதன் காரணமாகத்தான் இழப்பு ஏற்பட்டது என்பதை அறிந்து இனி வரும் எதிர்காலங்களில், இந்த இழப்புகள் ஏற்படா வண்ணம் நடைபெறுகிற கண்காட்சிகளின் மூலம் லாபம் ஈட்டுகிற வகையிலேயும், நடைபெற இருக்கிற கண்காட்சிகளின் மூலம் லாபம் ஈட்டுகிற வகையிலும், இந்த அரசு அதற்கான சாத்தியக் கூறுகளை ஆய்ந்து வருகிறது.

கொல்லிமலையில் பொது சுகாதார மருத்துவமனை அமைத்தல்.

*5497 திரு. கே. சின்னசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கொல்லிமலையில் பொது சுகாதார மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கொல்லிமலையில் பொது சுகாதார மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்.

*8318 திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், ஜவ்வாது மலை நெல்லிவாசல் நாட்டில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம் ஜவ்வாதுமலை நெல்லிவாசல் நாட்டில் ஆரம்ப சுகர்தார நிலையம் அமைக்கும் திட்டம் எதுவும் அரசிடம் தற்சமயம் பரிசீலனையில் இல்லை,